செ.வெ.எண்: 16/2017 நாள்: 05.01.2017

## வலை கம்பெனியிலிருந்து மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு படி, கன்னியாகுமரி மாவட்டம், அனந்தநாடார்குடி, பருத்திவிளை பகுதியில் செயல்பட்டு வரும் ஆப்பிள் நெட் என்ற வலை கம்பெனியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. குமுதா அவர்கள் தலைமையில், நாகர்கோவில் வருவாய் ஆய்வாளர், அப்பகுதி நல ஆய்வாளர் மற்றும் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு காவல்துறையினர் அடங்கிய குழுவினர் 29.12.2016 அன்று மேற்கொண்ட ஆய்வில் அந்நிறுவனத்தில் 12 ஆண்கள் 5 பெண்கள் மற்றும் 3 குழந்தைகள் கொத்தடிமைகளாக பணிபுரிந்து வந்தது தெரியவந்தது.

இப்பணியாளர்களுக்கு ஊதியம் பல மாதங்களாக வழங்கப்படவில்லையெனவும், உணவு சரியாக வழங்கப்படவில்லை எனவும் தெரியவந்ததை தொடர்ந்து இப்பணியாளர்கள் மீட்கப்பட்டனர். இதில் 3 குழந்தைகள் மற்றும் வெளிமாநிலத்தை சார்ந்த 5 பெண்கள் குழந்தைகள் நலக்குழுவில் ஒப்படைக்கப்பட்டனர். பணியாளர்கள் அனைவருக்கும் நிலுவையிலுள்ள சம்பளத்தொகையினை நிறுவனத்திலிருந்து பெற்று 12 ஆண்களுக்கு 30.12.2016 அன்று கொடுக்கப்பட்டு அவரவர் ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் தமிழ்நாட்டை சேர்ந்த 3 பெண்கள் அவரவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஒரிசா மாநிலத்தை சார்ந்த 3 குழந்தைகள் மற்றும் 2 பெண்களுக்கும் அவர்களது சம்பளத்தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்று 04.01.2016 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் இச்சம்பவம் குறித்த மேல்நடவடிக்கை குழந்தைகள் நலக்குழுவினால் மேற்கொள்ளப்படும் என மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. குமுதா அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.